22nd November 1963]

கட்டாயக் கல்வி

* 463 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கட்டாயக் கல்வி அமுலில் உள்ள பகுதிகளிலுள்ள வயது வந்த சிறுவர்களைப் பள்ளிக்கு அனுப்பாதிருக்கும் பெற்றோர்கள் மீது எத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுகிறது?

(இ) அப்பகுதிகளில் வயது வந்த எல்லாக் குழந்தைகளுமே பள்ளிக்கு அனுப்பப்படுகின்றனரா என்பது எவ்வாறு கண்காணிக்கப்படுகிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Although the Elementary Education Act and the Rules framed thereunder provide for punitive action against the defaulting persons, experience has shown that incentives like midday meals, books, slates and free clothing and persuasion yield better results than legal action. Therefore, a persuasive approach has been adopted and punitive action has not been resorted to against the defaulting parents.

(*b*) Every school is required to maintain a census register containing the details of each child of school age whether at school or otherwise. In Panchayat Union areas, the Panchayat (Social Education) Committees and in Non-Panchayat Union areas, the attendance committees, will watch the non-attendance of the children at school.

திரு. சி. ம. அம்பிகாபதி: 9, 10, 11 வயதுள்ள குழந்தைகள் பள்ளியில் சேருவதற்கு வெட்கப்பட்டுக்கொண்டு சேராமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த முறையில் கல்வி போதிப்பது என்பது பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஆறு முதல் பதினோரு வயது வரை உள்ள குழந்தைகளுக்குக் கட்டாய ஆரம்பக் கல்வி சொல்லிக் கொடுக்கவேண்டுமென்ற திட்டம் இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. பிள்ளைகள் பள்ளிக்கு வரத் தயங்குகிறார்கள் என்றால் ஸ்தலத்தில் இருக்கிறவர்கள் அவர்களைப் பள்ளிக்குச் செல்லும்படி செய்யும் முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: ஆறு வயது முதல் 11 வயது வரை உள்ள குழந்தைகளில் 90 சதவிகிதத்தினரை இந்த ஆண்டுக்குள் பள்ளிக்குக் கொண்டு வரவேண்டுமென்ற உத்தரவை அரசாங்கம் பிறப்பித்திருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அரசாங்கம் 100-க்கு 90 விகிதத்தினரை பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும்படி செய்து விடலாம் என்று எதிர்பார்க்கிறது.